சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024

அ.சா : 19 (LW 35)

பெயர் : சங்கர்

நாள் : 08.08.2025

மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1, 3, 2, 4, 9, 10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ.19-ல் எம்.எஸ். சபரி எலக்ட்ரானிக்ஸ் கொடுத்த சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் மின் விளக்குகள் எரிந்ததா என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் சாட்சி ஆட்டோமேட்டிக் டைமர் அறிக்கையை பார்த்து தெரியும். ஆட்டோமேட்டிக் டைமர் என்பது எம்.எஸ். சபரி எலக்ட்ரானிக்ஸ் நிர்வாக பொறுப்பில் உள்ளது என்றால் சரிதான்.

அ.சங்கர் 8/8/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

முதன்முதலாக சொல்கிறேன். இதற்கு முன்பு போலிசாரிடம் சொல்லவில்லை. டி.எஸ்.பி பெரம்பூர் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள யாரையாவது சாட்சியாக இருக்குமாறு அழைத்தாரா என்று எனக்கு தெரியாது. அதைப்பற்றிய குறிப்பு நான் கையெழுத்து இட்ட தாள்களில் இருந்ததா என்றால் இல்லை. நான் கிராம நிர்வாக அலுவலராக உள்ள கிராமங்கள் தரங்கம்பாடி தாலுக்காவில் உள்ளன. மணக்குடி மயிலாடுதுறை நகரத்தை ஒட்டி உள்ள ஒரு பகுதி மயிலாடுதுறை தாலுக்காவில் உள்ளது என்றால் சரிதான். காவல் துறை டி.எஸ்.பி அழைக்கும் இடங்களுக்கு எல்லாம் செல்வது என்னுடைய பணி அல்ல என்பது எனக்கு தெரியும். நான் வெளியில் செல்வதானால் வட்டாட்சியரிடம் தெரிவித்து விட்டு செல்ல வேண்டும். அவ்வாறு தெரிவித்து விட்டு சென்றதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. சதீஷ் என்பவரின் வீட்டு விலாசம் தெரு எந்த விதமான வீடு என்பதை பற்றி நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. சதீஷ் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளோரை டி.எஸ்.பி சாட்சியாக அழைத்தாரா என்பது எனக்கு தெரியாது. நான் டி.எஸ்.பி உடன் தான் மணக்குடி கிராமத்திற்கு சென்றேன். நான் சொன்னது போல் மணக்குடி கிராமத்திற்கு செல்லவில்லை என்றும் அங்கு எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் நான் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் அது சரியல்ல. பெரம்பூர் மயிலாடுதுறை காவல் துணை கண்காணிப்பாளர் ஆளுகைக்கு உட்பட்டது. இறந்து போன அஜித் எனது உறவினர் என்பதால் என்னை பயன்படுத்தி இடத்தை மாற்றி இவ்வாறு பொய்யாக சாட்சி ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கு இதுப்பற்றி எதுவுமே தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் இறந்து போன நபரின் பெயர் அஜித்குமார். அவர் மயிலாடுதுறை கலைஞர் காலனி பகுதியில் வசித்து வந்தார். கொடைவிளாகத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையே சுமார் 20 கி.மீ தொலைவு இருக்கும். கொடைவிளாகத்திற்கும் பெரம்பூர் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ. தொலைவு இருக்கும். பெரம்பூர் கிராமத்திற்கு என்னை டி.எஸ்.பி அழைத்ததற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு முதல் நான் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பில் இருந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அது சம்பந்தமாக எனது விசாரணையிலும் நான் சொல்லவில்லை. டி.எஸ்.பி அலுவலகம் எங்கு உள்ளது என்று தெரியாது. மயிலாடுதுறை காவல் நிலையம் சுந்தரம் தியேட்டர் அருகில் உள்ளது. அன்று தான் முதல் முதலாக டி.எஸ்.பி-ஐ பார்த்தேன். என்னை டி.எஸ்.பி தான் போன் மூலமாக அழைத்தார். என்னுடைய மொபைல் நம்பர் அவருக்கு எப்படி தெரியும் என்று எனக்கு தெரியாது. நான் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பவம் என்னுடைய நிர்வாகத்திற்கு உட்பட்ட கிராமங்களில் நடைபெறவில்லை என்றால் அது சரிதான். டி.எஸ்.பி உடன் புறப்பட்டு ஏழு நபர்களும் எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதைப்பற்றி டி.எஸ்.பி என்னிடம் எதுவும் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விஷயம் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எந்த ஒரு எதிரியும் நான் சொல்வது போல் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்க வில்லை என்றும் அது என் முன்பாக பதிவு செய்யவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் இடத்தில் விதத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. கிராம உதவியாளர் கண்ணன் பெரம்பூர் கிராமத்தின் உதவியாளர். அவர் என்னுடைய கிராம உதவியாளர் அல்ல. காவல் நிலையத்திற்கு அருகில் தான் அவருடைய வீடு உள்ளது. நான் வீட்டிலிருந்து பெரம்பூர் சென்ற போது தனியாகத்தான் சென்றேன். நான் கண்ணன் வீட்டிற்கு சென்று அவரை அழைத்து கொண்டு இருசக்கர வாகனத்தில் காவல் நிலையம் சென்றேன். என் வீட்டிலிருந்து கண்ணன் வீடு 2 கி.மீ தூரம் இருக்கும். காவல் நிலையத்திலிருந்து கண்ணன் வீடு 50 அடி தூரம். இந்த விபரத்தை இப்போது தான்

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 13 (LW 22)
பெயர் : பார்த்திபன்
நாள் : 08.08.2025

மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2, 4, 9, 10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஒவ்வொரு எதிரியையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு எதிரியும் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தார். ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு எதிரியும் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது. முதல் பக்கத்தில் உள்ள ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து கடைசி பக்கம் வரை எதிரி சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒவ்வொரு வாக்குமூலங்கள் சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. அதில் ஒவ்வொரு வாக்குமூலத்திலும் சாட்சியின் பெயரும் எதிரியின் பெயரும் குறிப்பிட்டு சொல்லப்பட்டது. ஆயுதங்கள் கைப்பற்றிய இடங்களில் ஒரு தாளில் கையொப்பம் செய்தேன். அ.சா.14-ல் எதிரி கையொப்பம் செய்யவில்லை. மணக்குடியில் லேப்டாப்பில் டைப் செய்து வெளியில் சென்று பிரின்ட் எடுத்து வந்த பிறகு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். லேப்டாப்பில் தட்டச்சு செய்யப்பட்ட விபரமும் பிரின்ட் எடுத்துவந்த தாளில் உள்ள விபரமும் ஒன்று தான் என்று நாங்கள் சரிபார்க்கவில்லை என்றால் அது சரியல்ல. நாங்கள் சரி பார்த்தோம். அது எங்கு பிரின்ட் எடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது. லேப்டாப்பில் டைப் செய்து ஒரு அரை மணி நேரத்தில் பிரின்ட் எடுக்கப்பட்டது. அ.சா.14-ல் எனது கையொப்பத்திற்கு கீழ் தேதி மற்றும் பதவி நிலை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.14-ல் உள்ள கையொப்பமும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக உள்ள என்னுடைய கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. என் முன்னியைலில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றாலும் சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது சரியல்ல.

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 12 (LW 20)
பெயர் : ராஜசேகர்
நாள் : 08.08.2025

மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை எந்த போலிசாரும் விசாரிக்கவில்லை. என்னுடைய வீடும் அ.சா. 1 வீடும் இறந்து போன அஜித்குமார் வீடும் ஒரே தெருவில் உள்ளது. 20.03.2024 அன்று எந்த கிழமை என்று எனக்கு தெரியாது. எனக்கு 24 மணி நேரமும் பணி நேரம் தான். நானும் ராஜாங்கம் என்பவரும் ஏ.வி.சி பின்புறம் உள்ள சாலை வழியாக நான் முதல் விசாரணையில் சொன்ன தேதியில் இருசக்கர வாகனத்தில் சென்றோம். போலிஸ் விசாரணையில் நாங்கள் இருவரும் நடந்து சென்றதாக சொன்னோம். என்னுடைய வீட்டிலிருந்து ஏ.வி.சி காலேஜிற்கு அருகில் டி.எஸ்.பி எதிரிகளை பிடித்து வைத்திருந்த இடம் சுமார் 6 கி.மீ. இருக்கும். ஏ.வி.சி கல்லூரியின் முன்புறம் தரங்கம்பாடி மெயின் ரோடு என்றால் சரிதான். அந்த சாலையில் நிறைய பேருந்துகள் மயிலாடுதுறை பேருந்து நிலையம் வரை வரும் என்றால் சரிதான். நான் வேலையாகத்தான் அங்கு சென்றேன். குறிப்பாக எந்த காரணத்திற்காக சென்றேன் என்று விசாரணையில் சொல்லவில்லை. அந்த இடத்தில் என்னுடைய வீடு இல்லை. தொழில் செய்யும் இடம் இல்லை என்றால் சாட்சி அங்கு பாதாள சாக்கடை உள்ளது. அங்கு வேலை பார்ப்பேன். இந்த விபரத்தை நான் இதற்கு முன்பு வேறு எங்கும் சொல்லவில்லை. சாட்சியிடம் முதல் விசாரணையில் உள்ள கையெழுத்து மற்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்களை காட்டி கேட்டபோது இரண்டிற்கு வித்தியாசம் உள்ளது. ஆனால் நான் எப்படி வேண்டுமானாலும் போடுவேன் என்றார். கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது அல்ல என்றால் அது சரியல்ல. காவல் துறையினர் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில் போலிசார் கேட்டுக்கொண்டதற்காகவும் அஜித்குமார் என்னுடைய உறவுக்காரர் என்பதற்காகவும் நான் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை

ராஜசேகர்